கின்றனர். காமாலைக் கண்ணனுக்குக் கரித்தூளும் மஞ்சள் என்று சொல்வார்கள். அதுபோன்று நிறக் கண்ணாடி அணிந்துகொண்டு வந்து தமிழகத்திலே காவல்துறையினர் ஆளும் கட்சிக்கு ஆதரவாகவும், எதிர்க்கட்சிகளுக்கு எதிராகவும் இருக்கிறார்கள் என்று எப்போதும் சொல்கிறார்கள்.

காவல் துறையைப் பொறுத்தவரையிலே பல இடங்களிலே போக்குவரத்துக்கான ஜீப் இல்லாத நிலைமை சில காவல் நிலையங்களில் இருக்கின்றன. ஆகவே எல்லாக் காவல் நிலையங்களுக்கும் ஜீப் வழங்கவேண்டும். போக்குவரத்து வசதியில்லாமல் அவர்கள் பணியாற்றவேண்டிய அவல நிலையைப் போக்கியாக வேண்டும்.

அடுத்து, உத்திரமேரூர் ஒரு தாலுக்காவாக இருந்தாலும் அங்கே தீயணைப்பு நிலையங்கள் சரியாக அமைக்கப்படவில்லை. தீயணைப்பு நிலையங்களை அங்கே ஏற்படுத்தித் தருவதோடு ஒரு காவல் நிலையமும் அமைத்துத் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து எம். ஏ. கிரிமினாலஜி படித்தவர்களுக்கு எல்லாம் காவல்துறையிலே பணியாற்ற வாய்ப்பு நல்க வேண்டும். நம்முடைய மாண்புமிகு துணைத் தலைவர் அவர்கள் கூட எம். ஏ. கிரிமினாலஜி படித்தவர்கள். அவர்களுக்கு அந்த விவரம் தெரியும். ஆகவே எம். ஏ. கிரிமினாலஜி படித்தவர்களைக் காவல் துறையிலே எடுத்துக் கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

தமிழகத்தைப் பொறுத்தவரையிலே செங்கோல் வழுவாமல் பணியாற்றிக் கொண்டிருக்கின்ற இந்த ஆட்சியிலே சந்தேக வழக்குகளே இல்லை. ஆனால் கலைஞரின் ஆட்சிக் காலத்திலே 30 ஆயிரம் முதல் 40 ஆயிரம் சந்தேக வழக்குகள் ஆண்டுதோறும் போடப்பட்டுவந்தன. ஆகவே கலைஞர் ஆண்டுதோறும் 40,000 தமிழர்களைச் சந்தேகப்பட்டு வந்திருக்கிறார். ஆனால் புரட்சித் தலைவர் அவர்கள், தமிழ்த்தாயின் தவப்புதல்வராக சந்தேக வழக்குகளை ஒழித்துக் கட்டிவிட்டு எல்லோரும் இந்நாட்டு மன்னர் என்று சொல்கிற வகையிலே ஆட்சி இனிமையாக நடத்தி வருகிறார். அந்த வகையில் புரட்சித் தலைவரால் கொண்டுவரப்பட்ட இந்த மானியக் கோரிக்கையினை மனதார வரவேற்று அமருகிறேன். நன்றி, வணக்கம்.

3. அறிவிப்புகள் (தொடர்ச்சி).

(ஆ) பேரவையின் அலுவல்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவைக்கு ஒர் அறிவிப்பு. பேரவையிலுள்ள எல்லா கட்சிகளையும் கலந்து, பேரவையின் நிகழ்ச்சி குறித்து கீழ்க்கண்ட முடிவு, பேரவைக்குத் தெரிவிக்கப்படுகிறது.

காவல்துறை மற்றும் தீயணைப்புப் பணிகள் குறித்த மானியக் கோரிக்கைகள் மீது மேலும் விவாதமும் பதிலுரையும் நாளை, 7—5—1981 அன்றும் தொடரும். இந்த மானியக் கோரிக்கைகள் முடிந்தவுடன், நாளை எடுத்துக் கொள்ளப்பட வேண்டிய மானியக் கோரிக்கை விவாதத்திற்கும் வாக்கெடுப்பிற்கும் எடுத்துக் கொள்ளப்பெறும்.

பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளை (7—5—1981) காலை 9.00 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1.29 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

6. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

எதுவுமில்லை.

இணைப்பு I.

[360-ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிட்ட வினா எண். 1005 க்கான விடையைக் காண்க.]

(அ) தமிழ்நாடு நிலவியல் பிரிவு 1979ம் ஆண்டு அக்டோபர் மாதம் முதல் 1980-ஆம் ஆண்டு மார்ச் மாதம் முடிய கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள தடிக்காரக் கோணம் என்னும் இடத்தில் விரிவான நிலவியல் ஆய்வினை மேற்கொண்டுள்ளது. மேற்கண்ட ஆய்வின் மூலமாக வைடூரியத்தில் இருவகை கற்கள் இங்கும் அங்குமாக பெக்மடைட் (Pegmatite) என்னும் பாறை விரிசல்களில் இருப்பதாகத் தெரிய வந்துள்ளது. இந்த இரண்டு வகை கற்களில் ஒவ்வொன்றிலும் 1 கேரட் (0.2gms) அளவுகொண்டு வரப்பட்டு, அதன் தன்மையை (Quality) ஆராய்வதற்காக உடைத்து, மெருகூட்டப்பட்டது. இக்கற்கள் மற்ற கற்களைப்போல் தக்கவடிவத்திலும், ஒரே இடத்திலும் கிடைக்காமல் இங்கும் அங்குமாக இருப்பதால், அதனுடைய முழுஅளவையும் மதிப்பிட இயலவில்லை. இப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வு இக்கற்கள் அதிக அளவில் இங்கு இருப்பதற்கான வாய்ப்பும் இல்லை என்பதை வெளிப்படுத்துகிறது.

(ஆ) இந்த ஆராய்ச்சி முதலில் 1978 ஆம் ஆண்டு செப்டம்பரில் எடுத்துக்கொள்ளப்பட்டு, அவ்வருடம் அக்டோபர் மாதத்தில் வீரப்புலி காட்டுப்பகுதியில் அம்மாதத்திலேயே